THE HINDU-TAMIL

Dated: 20.08.2024

## தமிழகம் முழுவதும் இன்றுமுதல்

# வீடுவீடாக வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி தொடக்கம்

● சென்னை

தமிழகம் முழுவதும் வீடுவீடாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கள ஆய்வு செய்து, வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணி இன்றுமுதல் தொடங்குகிறது.

அடுத்தாண்டு ஜனவரி 1-ம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி, இன்று ஆக.20-ம் தேதி முதல் அக்.18-ம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச் சாவடிப் பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதையடுத்து, ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்.29-ம் தேதி வெளியிடப்பட்டு அன்றிலிருந்து நவ.28-ம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும்.

2025-ம் ஆண்டு ஜன.6-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். எனவே, அக். 29 முதல் நவ. 28-ம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கெனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வழங்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர், வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதுக்கான சான்றாக, பிறப்பு சான்றிதழ், ஆதார், பான் அட்டை, ஓட்டுநர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10-ம் வகுப்பு அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு சான்றிதழ்கள், கடவுச் சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்குகீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம்.

மேலும், https://voters.eci.gov.in, https://voterportal.eci.gov.in ஆகிய இணையதள முகவரி மற்றும் "வாக்காளர் உதவி" கைபேசி செயலி (VOTER HELPLINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மாநகராட்சி ஆணையரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான ஜெ.குமரகுருபரன் தலைமையில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகள் குறித்தும், அரசியல் கட்சிகளின் முகவர்களின் ஒத்துழைப்பு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

DAILY THANTHI

Dated: 20.08.2024

### சென்னையில்

# வாக்காளர் சரிபார்ப்பு பணி இன்று தொடக்கம்

சென்னை, ஆக.20-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, 2025-ம் ஆண்டு ஜனவரி 6-ந்தேதி வாக்காளர் பட்டியல் வெளியிடப் பட உள்ளது. சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்த முகாம்கள் நடைபெற உள்ளது. அந்த வகையில், சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட அலுவலகத்தில் நேற்று, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளின் 2025-ம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடந்தது.

கூட்டத்திற்கு மாநகராட்சி கமிஷனர் ஜெ.குமரகுருபரன் தலைமை தாங்கினார். கூடுதல் கமிஷனர் ஆர்.லலிதா, மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சார்பில் பிரதிநிதிகளான பா.ஜனதா சார்பில் மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், காங்கிரஸ் சார்பில் எஸ்.கே.நவாஷ், தி.மு.க. சார்பில் சந்துரு, அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதைத்தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர் விவரங்களையும் சரிபார்க்கும் பணி இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் அக்டோபர் மாதம் 18-ந்தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் மேற் கொள்ளப்பட்டு 'ஓட்டர்ஸ் ஹெல்ப்லைன் 1950' செயலியில் பதிவேற்றம் செய்யப்படும். தொடர் நடவடிக்கையாக வாக் காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம், நீக்குதல் மற்றும் வாக்குச்சாவடி மையங்கள் பிரித்தல், இடமாற்றம், கட்டிட மாற்றம் போன்ற பணிகள் நடைபெற உள்ளது.

முதற்கட்டமாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இன்று முதல் வீடு, வீடாகச் சென்று குடும்பத்தில் உள்ள வாக்காளர் விவரங்களை சரிபார்க்க உள்ளனர். எனவே, வாக்காளர் கணக்கெடுப்பு பணிக்கு வரும் வாக்குச்சாவடி நிலை அலுவ லர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கமிஷனர் ஜெ.குமரகுருபரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

DINAMALAR

Dated: 20.08.2024

# வீடு, வீடாக வாக்காளர் ஆய்வு

**சென்னை, ஆக. 20–**

சென்னை மாவட்டத்தில் உள்ள, 16 சட்டசபை தொகுதிகளில், 2025ம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் தொடர்பான கலந்தாய்வு கூட்டம், மாநகராட்சி கமிஷனரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான குமரகுருபரன் தலைமையில், ரிப்பன் மாளிகையில் நேற்று நடந்தது.

கமிஷனர் குமரகுருபரன் கூறியதாவது:

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், பெயர் திருத்தம், பெயர் நீக்கல், ஓட்டுச்சாவடி மையங்கள் பிரித்தல், இடமாற்றம், கட்டட மாற்றம் மற்றும் பெயர் மாற்றம் செய்தல் போன்ற பணிகள், இன்று முதல், அக்., 18ம் தேதி வரை மேற்கொள்ளப்பட உள்ளன. முதற்கட்ட நடவடிக்கையாக ஓட்டுச்சாவடி அலுவலர்கள் வீடு, வீடாக சென்று குடும்பத்தில் உள்ள வாக்காளர் விபரங்களை சரிபார்க்க உள்ளனர்.

எனவே, வாக்காளர் கணக்கெடுப்பு பணிக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பட்டியல் குளறுபடி

அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் பேசியதாவது:

வாக்காளர் பட்டியலில் மிகப்பெரிய குளறுபடிகள் நடந்துள்ளன. பலரால் ஓட்டளிக்க முடியவில்லை. கடந்த தேர்தலில் நீக்கப்பட்டோருடைய பட்டியலை, அதற்கான காரணத்தை சரியாக காரணங்களுடன் வெளியிட வேண்டும். இந்தாண்டும் வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் இருந்தால், அ.தி.மு.க., சார்பில் நீதிமன்றத்திற்கு செல்வோம்.

இவ்வாறு அவர் பேசினார்.